Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.358/2021

**Depositions of PW- 4**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.கந்தசாமி | Occupation | வனத்துறை பணி ஓய்வு |
| Father's name | முத்தையா | Calling | |
| Village | இந்திராநகர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of May 2026.

11.05.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை தொடர்ச்சி–**

கடந்த 15.09.2012 அன்று திருவில்லிபுத்தூர் பிரிவு வனவர் செந்தில் அவர்களுக்கு காலை 10.00 மணியளவில் ரகசிய தகவலின் அடிப்படையில் விரியன்கோவில் பீட் தட்டப்பாறை சரகம் ஒட்டிய பட்டா இடத்தில் கலங்காபேரி கிராமத்தை சேர்ந்த கம்மாபட்டி கிராமம் அப்பையாநாயக்கர் வயது 30 த/பெ.அப்பையாநாயக்கர் மேற்கண்ட நபரிடம் அவரது தோட்டத்தில் விசாரித்தபோது அவர் 15.09.2012 காலை சுமார் 07.15 மணியளவில் மேற்படி நபர் அவரது தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்தபோது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ராஜநாகம் ஒன்று வருவதை மேற்படி நபர் பார்த்து அவர் கையில் வைத்திருந்த வெள்ளை துவரை கம்பு நீளம் 181 சென்டிமீட்டர் கம்பை கொண்டு ராஜநாகத்தை தலையில் அடித்து இறந்ததை உறுதி செய்து அவரது தோட்டத்திற்கு அருகிலுள்ள ஓடை பகுதியில் சுமார் 1 1/2 அடி ஆழத்தில் குழி தோண்டு புதைத்ததாக மேற்கண்ட தகவலை கூறினார். நாங்கள் மம்சாபுரம் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.சுமதி அவர்களுக்கு தகவல் தெரிவித்து மற்றும் மம்சாபுரம் கிராம முக்கியஸ்தர் குருசாமி த/பெ.கிருஷ்ணசாமி ஆகியோர்களை சம்பவயிடத்திற்கு வரவழைத்து மேற்படி நபர் புதைத்து வைத்த இடத்தை காண்பித்தார். கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் மற்றும் மம்சாபுரம் கிராம

ஊர் முக்கியஸ்தர் முன்னிலையில் புதைத்து வைக்கப்பட்ட ராஜநாகத்தை எடுத்து ராஜநாகம் பட்டியல –2 பிரிவில் வருவதால் உடற்கூராய்வு செய்வதற்கு திருவில்லிபுத்தூர் வனச்சரக அலுவலகத்திற்கு எடுத்துவரப்பட்டு மேற்படி பிடிபொருட்களாகிய ராஜநாகத்தையும் அவர் அடிக்க பயன்படுத்திய வெள்ளை துவரை கம்பையும் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் ஒப்படைத்து திருவில்லிபுத்தூர் வனச்சரகத்தில் மேற்கண்ட நபரை நீதிமன்ற காவலில் அடைத்து மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 4 வது கையெழுத்து என்னுடையதுதான். **ஒப்புதல் வாக்குமூலத்திலுளள 4 வது கையெழுத்து அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள பார்வை மகஜரிலுள்ள 4 வது கையெழுத்து என்னுடையதுதான்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.